# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:51** **தேதி:18.07.2015**

## ஊழியர் பிரச்சனைகள் மீது நடைபெற்ற பேச்சு வார்த்தை

அன்பார்ந்த தோழர்களே,

**கேடர் பெயர் மாற்ற பிரச்சனைக்கு தீர்வு காண GM(Estt) உடன் விவாதம்:-** பல வருடங்களாக செயல்பட்டு வரும் பெயர் மாற்றக் கமிட்டி இன்னமும் தனது பணியினை முடிக்க வில்லை. Sr.TOA மற்றும் TTA கேடர்களின் பெயர் மாற்றங்கள் தொடர்பாக இன்னமும் தீர்வு காணப்படவில்லை. 12.05.2015 அன்று நடைபெற்ற JAC கூட்டத்தில் சேவையில் மூத்த Sr.TOAக்களுக்கு 'SUPERINTENDENT' என்ற பெயரும் TTAக்களுக்கு 'JUNIOR ENGINEER' என்ற பெயருமாவது குறைந்த பட்சம் வழங்க வேண்டும் என்று தீர்மாணித்துள்ளது. BSNL ஊழியர் சங்கத்தின் தொடர் வற்புறுத்தல் காரணமாக பெயர் மாற்றக் கமிட்டியின் கூட்டம் 28.07.2015 அன்று நடைபெற உள்ளது. இந்த பின்னணியில் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களும், துணை பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி அவர்களும் 17.07.2015 அன்று GM(Estt) திருமிகு மது அரோரா அவர்களை சந்தித்து இந்த பிரச்சனையை ஆழமாக விவாதித்து நமது கோரிக்கைகளின் நியாயத்தை காரண காரியங்களோடு எடுத்துக் கூறி உள்ளனர். GM(Estt) அவர்களும் இந்த முன்மொழிவுகளை ஆழமாக பரிசீலிக்க ஒத்துக் கொண்டுள்ளார். 28.07.2015 அன்று நடைபெற உள்ள கூட்டத்தில் ஒரு சுமூக முடிவு எட்டப்படும் என நம்புகிறோம்.

**ஊதிய தேக்கநிலை பிரச்சனைக்கு தீர்வு காண வலியுறுத்தல்:-** 26.05.2015 அன்று RLCயுடன் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் RM மற்றும் Gr.Dக்களின் ஊதிய தேக்கம் தொடர்பாக JAC தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும் என BSNL நிர்வாகத்திற்கு, RLC வழி காட்டினார். ஆனா GM(Estt) ஒரு மாத காலம் விடுமுறையில் சென்று விட்டதால் அந்தக் கூட்டம் இன்று வரை நடைபெற வில்லை. GM(Estt) அவர்களுடன் 17.07.2015 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையில் இந்த பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் BSNL ஊழியர் சங்கத்தின் தலைவர்கள் விவாதித்து உள்ளனர். விரைவில் JAC தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த GM(Estt) உறுதி அளித்துள்ளார்.

**அனாமலி பிரச்சனையை BSNL நிர்வாகமே தீர்வு காண வேண்டும்:-** முதல் ஊதிய மாற்றத்தின் போது ஏற்பட்ட அனாமலி பிரச்சனைகளை தீர்வு காண தனது முன்மொழிவுகளை BSNL நிர்வாகம் DOTக்கு அனுப்பியிருந்தது. BSNL ஊழியர் சங்கத் தலைவர்கள் DOT அதிகாரிகளுடன் பலமுறை இது தொடர்பாக விவாதித்து உள்ளனர். பல மாதங்கள் அந்த

கோப்பை தன்னகத்தே வைத்திருந்த DOT தற்போது அதனை BSNLக்கு திருப்பி அனுப்பியுள்ளது. மீண்டும் DOT க்கு திருப்பி அனுப்பாமல் இந்த பிரச்சனையை BSNL நிர்வாகமே தீர்வு காண வேண்டும் என நமது தலைவர்கள் வலியுறுத்தி உள்ளனர். ஓய்வூதியத்தில் தாக்கம் ஏற்படும் பிரச்சனையாக இருந்தாலும், BSNL கார்ப்பரேட் அலுவலகமே முடிவு எடுத்துக் கொள்ளலாம் என தெரிவிக்கின்ற DOT உத்தரவினையும் அவர்கள் மேற்கோள் காட்டியுள்ளனர். நமது தலைவர்கள் குறிப்பிட்டுள்ள கடிதத்தின் பின்னணியில் இந்த பிரச்சனையை மறு ஆய்வு செய்ய GM(Estt) ஏற்றுக் கொண்டுள்ளார்.

**BSNL நேரடி நியமன ஊழியர்களின் ஓய்வு கால பயன்களுக்கு உடனடி தீர்வு தேவை:-**

நேரடி நியமன ஊழியர்களுக்கு ஓய்வு கால பயன்கள் தொடர்பாக BSNL நிர்வாகத்துடன் பல ஆண்டுகளாக ஊழியர் சங்கங்களும், அதிகாரிகள் சங்கங்களும் பேச்சு வார்த்தைகளை நடத்தி வந்துள்ளனன. ஆனால் இன்று வரை தீர்வு காணப்படவில்லை.

அனைத்து பொதுத்துறை நிறுவனங்களும், தங்களின் ஊழியர்களின் ஓய்வு கால பயன்களுக்காக அவர்களின் அடிப்படை ஊதியம் மற்றும் பஞ்சப்படியில் 30 சதவிகிதத்தை வழங்க வேண்டும் என பொதுத்துறை நிறுவனங்களுக்கான இலாகா தனது 02.04.2009 தேதியிட்ட அலுவலக குறிப்பில் வெளியிட்டுள்ளது. அதன் அடிப்படையில் BHEL, COAL INDIA LTD., NTPC, POWER GRID, EIL, AAI மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்கள் தங்களின் ஊழியர்களுக்கு இதனை அமுலாக்கி வருகிறது.

BSNL நிறுவனத்தை பொருத்த வரை தனது ஊழியர்களுக்கு ஓய்வு கால பலன்களாக EPFக்கு 12 சதவிகிதமும், GRATUITYக்கு 4.5 சதவிகிதமும், POST RETIREMENT MEDICAL BENIFITSக்கு 1.5 சதவிகிதமும் என்ற கணக்கில் இதுவரை மொத்தமாக 18 சதவிகிதம் செலுத்தி வருகின்றது. எனவே மீதமுள்ள 12 சதவிகிதத்தை ஓய்வூதிய நிதியாக செலுத்த வேண்டும் என ஊழியர் சங்கங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. ஆனால் துவக்கத்தில் இருந்தே ஓய்வூதிய நிதிக்கு 2 சதவிகிதம் மட்டுமே செலுத்த முடியும் என நிர்வாகம் தெரிவித்து வந்தது. தற்போது அதனை 3 சதவிகிதமாக வழங்க முன்வந்துள்ளது. 12 சதவிகிதம் செலுத்த வேண்டிய இடத்தில் வெறும் 3 சதவிகிதம் என்று கூறுவது மிகக் குறைவாக உள்ள காரணத்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், இந்த பிரச்சனை நீண்டகாலமாக தீர்வு காணப்படாத காரணத்தால், ஊழியர்கள் வெறுப்படைந்துள்ளனர் என்பதையும் குறிப்பிட்டு உடனடியாக இந்த பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டுமென நமது மத்திய சங்கம் BSNL CMD அவர்களுக்கு 17.07.2015 அன்று ஒரு கடிதம் எழுதியுள்ளது.

ஊழியர் பிரச்சனைகளை நிர்வாகம் உடனடியாக தீர்வு காணும் என நம்புகிறோம்.

வாழ்த்துக்களுடன்

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**

**மாநில செயலாளர்.**